**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**SUB JUDGE**

**S.C. No. 398/ 2021**

Deposition of witness for PW6

Name : சதுரகிரி

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026.

---

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் எழுமலை கிராமத்தில் தலையாரியாக பணிபுரிந்து வந்து தற்போது நான் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் எழுமலை கிராமத்தில் தலையாரியாக பணிபுரிந்து வந்த போது கடந்த 29.09.2017ம் ஆண்டு சௌந்திர் என்ற சௌந்திரபாண்டி என்பவர் வழக்கில் வந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் இடுவதற்காக எழுமலை காவல் ஆய்வாளர் அழைப்பு விடுத்ததன் பேரில் சௌந்திரபாண்டி எங்கள் முன்பு விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அத்தாட்சியில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் 2வதாக கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துக்கள் **அ.சா.ஆ. 5 மற்றும் 6** அங்கிருந்து காவல ் நிலையம் அழைத்து சென்று மற்றொரு பொருளை எடுக்க வேண்டும் என்று அதற்கு சாட்சியாக வருமாறு கூறினார். அவர் அழைப்பின் பேரில் நல்லமநாயக்கன்பட்டிக்கு சென்றோம். அந்த ஊருக்கு தெற்கு பெத்தநாயக்கனூர் ஊரணி உள்ளது. அந்த ஊரணியின் முட்புதரில் இருந்து ஒரு கம்பியை எடுத்தார்கள். அது முனையில ் ஊசியாகவும், பின்புறம் அகலமாக இருந்தது. அங்கு என்னிடம் அத்தாட்சியில் கையெழுத்து வாங்கினாாகள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எழுமலை கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது எழுமலை காவல் ஆய்வாளர் அவர்கள் அழைத்ததன் பேரில் எழுமலை காவல் நிலையம ் சென்று அங்கே சென்று அவர்கள் சொன்ன இடத்தில் கையெழுத்து

செய்தேன் என்றால ் சரிதான். ஒரு பேப்பரில் ஒரு கையெழுத்து தான் செய்தேன். மற்றப்படி இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 11:58:24 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.